அதையும் பார்க்க வேண்டும். ஒரு மணி நேரம் தான் தியேட்டரில் இருந்திருக்கிறார்கள். அதுவும் ஆபரேசனுக்காக, டெலிவரிக்காக அங்கே கொண்டுபோய் செய்கிற அந்தத் தியேட்டரிலே செய்ய முடியாது. ஆகையால் மிகப் பெரிய தியேட்டரிலே, சிறப்பான தியேட்டரிலேதான் செய்யமுடியும். அது மட்டுமல்லாமல் செய்தவுடனே அந்த கிட்னியை வேறு ஒருவருக்குப் பொருத்த வேண்டும். 6 மாதம் வைத்துக் கொண்டு பிறகு பொருத்த முடியாது. உடனே 6 மணிக்குள் பொருத்த வேண்டுமென்று இருக்கிறது. எனவே, இந்த வகையிலே பார்க்கிறபோது இதுபோன்ற தவறு நடந்திருக்க வாய்ப்பே கிடையாது. யாரோ தவறாக இப்படி ஒரு செய்தியைப் பரப்பிய காரணத்தால் அந்த மக்கள் திசை திருப்பப்பட்டிருக்கிறார்கள். இப்போது நிலைமை சீராக இருக்கிறது. அதுபோன்ற ஒரு தவறும் நடை பெறவில்லை. மேலும் அந்தப் பெண்மனி இறந்தது டி.பி.யின் காரணமாக என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்தப் பிரச்சினையில் உண்மைக்குப் புறம்பாகத்தான், உண்மைக்கு மாறாகத்தான் செய்திகள் வந்திருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

(ஆ) ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பணியாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து கொண்டிருப்பது பற்றிய ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று நேற்றே திரு. பரிதி இளம்வழுதி கேட்டபோது, நான் நேற்றே இசைவு மறுத்திருந்தேன். அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாகவாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இன்று மேலும் திரு. ஜி. பழனிசாமி, திரு. வே. தம்புசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். அதை சிறப்புக் கவன ஈர்ப்பாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-2-1996-ஆம் நாளன்று ஈரோடு ஆர்.டி. அலுவலகத்தில் அரசுப் பணியாளர்களான 'டெக்னிக்கல்' பணியாளர்களுக்கும், 'நான்-டெக்னிக்கல்' பணியாளர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டு, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் ஏதேனும் நடத்திட வேண்டுமென்றால் அலுவலகத்திற்கு

உள் நடத்தாமல் வெளியே நடத்தினால் அரசு அதற்குண்டான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அரசின் சட்டத்திற்கு விரோதமாக உள்ளிருப்புப் போராட்டம் நடத்திய அந்த அதிகாரிகள் மீது 'ஸ்டிரைக்' செய்த நாளிலிருந்து சம்பளப் பிடித்தம் போன்ற கடுமையான நடவடிக்கை, மேலும் 'பிரேக்-இன் சர்வீஸ்', 'கட்-இன் சர்வீஸ்' போன்ற கடுமையான நடவடிக்கைகளை எடுத்து—ஏனென்றால் இது பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தினைக் கொடுப்பதாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) மேலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: அரசு ஊழியர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அரசு ஊழியர்கள் வருங்காலத்தில் போராட்டம் நடத்தாமல் இருக்க அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-2-1996 அன்று ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பணியாளர்கள் தாக்கப்பட்டதைப் போன்ற ஒரு செய்தியை அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். 26-2-1996 அன்று துணை போக்குவரத்து ஆணையர், கோயம்புத்தூரிலிருந்து ஈரோட்டுக்கு பணிகளை மேற்கொள்வதற்காக அங்கே வருகை தந்திருக்கிறார்கள். அதேபோன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலரும் அங்கே வந்திருக்கிறார்கள். இருந்தாலும், 12-2-1996-லிருந்து பணியாளர்கள் சிலர் உள்ளிருப்புப் போராட்டம் என்ற முறையில் பணிகளைச் செய்யாமல் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் பல்வேறு வாகனங்களுக்கான 'பெர்மிட்' வழங்க முடியாத அல்லது பணிகளை மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. அவர்கள் வைத்திருக்கிற 32 கோரிக்கைகளையும் இந்த அரசு மிகப் பரிவோடு கவனித்து 31 கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறது. ஆற்றல் மிக்க முதலமைச்சராக இருக்கக்கூடிய நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பெறப்படவில்லையென்றால் யாருடைய ஆட்சியிலும் அவர்களால் பெற முடியாது. அந்த அளவு இந்த அரசு கருணையோடு அவர்கள் மீது கனிவு காட்டி சில பணிகளையும் மேற்கொண்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை ஒன்று உச்ச நீதிமன்ற

வழக்கிலே தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. 'டெக்னிக்கல்' மற்றும் 'நான்-டெக்னிக்கல்' என இரண்டு வகையான பணியாளர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலே இருக்கிறார்கள். பதவி உயர்வில் 'டெக்னிக்கலில்' உள்ளவர்களுக்கு 4 பேருக்கும் 'நான்-டெக்னிக்கலில்' உள்ளவர்களுக்கு ஒருவருக்கும் என்ற முறையிலே உச்ச நீதிமன்றம் வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளதன் அடிப்படையில் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு அதற்கு மேல் வழங்க முடியாது. அவர்கள் அதைப் பெரிய கோரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதை வலியுறுத்தி உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் கருணையுள்ளத்தோடு அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலிக்கிற, பணியாளர்கள் எந்தக் கோரிக்கைகள் வைத்தாலும் அதை நிறைவேற்றித்த தருகிற அரசாக, புரட்சித் தலைவியினுடைய அரசு இருக்கிறது. கருணையுள்ளம் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.55

அதேபோல், உள்ளிருப்புப் போராட்டம் என்ற முறையில் பணிக்குச் செல்லாமல், இருக்கைகளில் அமர்ந்துகொண்டு பணிகள் செய்யாமல் இருப்பது, அரசுக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கும் இடையூறாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசு அழைத்தும் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. அவர்கள் உடனடியாகப் பேச்சுவார்த்தைக்கு வந்து சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். பேச்சு வார்த்தைக்கு வந்து சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவில்லை என்று சொன்னால், உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை எழுப்பியது தொடர்பான நடவடிக்கைகள்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை விட்டு வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் வெளியே போகிறபோது, அங்கியிருக்கிற கதவுகள், அங்கியிருக்கிற பொருட்கள், திரைச்சீலைகள் ஆகியவற்றையெல்லாம் சேதப்படுத்தும் நோக்கோடு பல காரியங்களைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இவர்கள் எப்பேர்ப்பட்ட